[22nd January 1965

* 62. *Q.*—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the details of the proposal to locate thermal power stations in the State in Public Sector; and

(*b*) whether the work would be completed during the III Plan period?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) & (*b*) It is proposed to locate a thermal power station at Ennore of 300 M.W. capacity which will be suitable for coal as well as oil firing and another station of 100 M.W. capacity at Tuticorin. The total capital cost of the Ennore plant will be about Rs. **2805.47** lakhs and of the Tuticorin Plant Rs. 1030.66 lakhs. According to the tentative construction programme, the projects are expected to be completed in about three years time.

திரு. வை. சங்கரன்: இந்தத் திட்டங்கள் மூன்று ஆண்டுகளுக்குள் பூர்த்தி ஆகலாம் என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மூன்று ஆண்டுகள் இதற்கு எடுத்துக்கொள்ள வேண்டியதன் காரணங்கள் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தெர்மல் பவர் ஸ்டேஷன்கள் வைக்க மூன்று வருஷங்கள் ஆகும்.

Madras-Tirupathi (State Transport buses).

*63. *Q.*—Sri M. KALYANASUNDARAM:
Sri A. G. BALAKRISHNAN:
Sri C. KOTHANDARAMA BAGAVATHAR:
Sri A. K. SUBBIAH:
Sri T. P. ALAGAMUTHU:
Sri S. MADHAVAN:
} Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the period for which the State Transport Service to Tirupathi remained suspended consequent on the seizure of the bus by the Andhra Pradesh officials;

(*b*) the estimated loss to the Transport Department due to the stoppage of this service; and

(*c*) whether any claim for compensation was made to Andhra Pradesh Government?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) The State Transport Services on all the inter-State routes extending to Andhra Pradesh State were suspended from 31st July 1964. The services have not been revived.

(*b*) State Transport Department has not sustained any loss on account of the stoppage of the services.

(*c*) **No.**

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்று அரசாங்கம்

22nd January 1965]

ஆலோசித்ததா? முதலில் நம்முடைய அரசாங்கத்திற்கும் ஆந்திர அரசாங்கத்திற்கும் ஏதாவது உடன்பாடு இருந்ததா? அந்த உடன்பாடு மீறப்பட்டது என்பது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதற்கு ஒரு நீண்ட சரித்திரம் இருக்கிறது. ஆந்திரப் பிரதேசமும் நம் மாநிலமும் ஒன்ருக இருந்தபோது, இரண்டு பகுதிகளிலும் ஒரேவிதமான வரி விதிப்பு இருந்தது. 1953-ஆம் ஆண்டில் ஆந்திரப் பிரதேசம் பிரிந்த பிறகு, சென்னையில் வரி கட்டினவர்களும், ஆந்திராவில் வரி கட்டினவர்களும் தங்கள் பஸ்களை மற்ற ராஜ்யத்தில் முன்பு போல் தொடர்ந்து ஓட்டிக்கொண்டிருக்கலாம் என்ற உடன்பாடு ஏற்பட்டது. அதற்குப் பிறகு, 1960-ம் ஆண்டில் என்று நினைக்கிறேன், மற்ருெரு உடன்பாடு ஏற்பட்டது. அதாவது, இரண்டு இராஜ்யங்களிலும் அவரவர்கள் இராஜ்யத்தில் அந்தந்த பஸ்களுக்குக் கட்டணம் கட்ட வேண்டும் என்றும், 1:1/6 என்ற விகிதாசாரத்தின்படி பிரித்துக்கொள்ள வேண்டும் என்றும் மற்ருெரு உடன்பாடு ஏற்பட்டது. அதற்குப் பிறகு, 1963-ஆம் ஆண்டில் இன்னுெரு உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி அந்தந்த ராஜ்யங்களில் வரி கட்டுவது என்றும், மற்ற ராஜ்யங்களிலே அவர்கள் சர்டிபிகேட் பெற்று ஓட்டலாம் என்றும், ஒரு ஏற்பாடு செய்தோம். இந்த அக்ரிமென்ட் பிரகாரம் நம்முடைய ராஜ்யத்தில் நாம் வரி கட்டிவிட்டு ஆந்திரப் பிரதேசத்திலும் ஓட்டலாம். அதே போல், ஆந்திரப் பிரதேசத்தில் உள்ளவர்கள் அங்கே வரி கட்டிவிட்டு நம்முடைய ராஜ்யத்திலும் பஸ்கள் ஓட்டலாம். இந்த நிலைமை இருந்தது.

டாக்ஸேஷன் ஆஃப் பாஸஞ்சர்ஸ் அண்டு குட்ஸ் ஆக்ட் என்று ஒரு சட்டத்தை நாம் இயற்றினேம். அதன்படி, நம்முடைய ராஜ்யத்தில் ஓட்டவேண்டுமென்ருல் மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்ஸ் கட்டவேண்டியதில்லை, ஆனல் டாக்ஸேஷன் ஆஃப் பாஸஞ்சர்ஸ் அண்ட் குட்ஸ் ஆக்ட் பிரகாரம் அவர்கள் எஞ்சியிருக்கும் வரிப் பகுதியை கட்ட வேண்டும் என்று நாம் சொன்னேம். ஆந்திரப் பிரதேசத்திலும் அவர்கள் இதே விதமான டாக்ஸேஷன் ஆஃப் பாசஞ்சர்ஸ் அண்ட் குட்ஸ் ஆக்ட் கொண்டுவந்தார்கள். பிறகு அதை அவர்கள் மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்சேஷனிலே மெர்ஜ் செய்துவிட்டார்கள். மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்சேஷனிலே மெர்ஜ் செய்தபின் அது மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்சேஷனுக ஆகிவிட்டது. ஆனல், நம்முடைய ராஜ்யத்திலிருந்து செல்கின்ற பஸ்கள் அல்லது லாரிகள் சம்பந்தப்பட்ட வரையில், நம்முடைய ராஜ்யத்தின் மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்சேஷன் கட்டினல் போதும் என்பது நம்முடைய ராஜ்ய சர்க்காரினுடைய அபிப்பிராயம். இதுவேதான் நம்முடைய ராஜ்யத்திலிருந்து அந்த ராஜ்யத்திலே பஸ், லாரி ஓட்டுகின்றவர்களுடைய அபிப்பிராயமும் கூட. ஆனல், ஆந்திர ராஜ்யத்திலே எந்த அளவுக்கு டாக்சேஷன் ஆஃப் பாசஞ்சர்ஸ் அண்ட் குட்ஸ் ஆக்ட் பிரகாரம் அதிகமான வரி வருகிறதோ அதை சர்ச்சார்ஜ்ஜாக விதித்து, அந்தப் பணத்தை அந்த ராஜ்யத்திலே கட்டவேண்டும் என்று கேட்டார்கள். சட்டப்படி இது கட்ட வேண்டியதில்லை என்ற

நிலைமை இருந்தது. சில தனிப்பட்ட லாரி சொந்தக்காரர்களுடைய லாரிகளை அவர்கள் பிடித்தார்கள். வரி கட்டவேண்டுமென்று சொன்னார்கள். அதற்குத் தனிப்பட்ட லாரி சொந்தக்காரர்கள் எல்லாம் ஆந்திரா ஹைகோர்ட்டிலே கேஸ் போட்டு 'ஸ்டே' வாங்கிவிட்டார்கள். அந்த நிலைமையில் நாம் ஆந்திர சர்க்காரிடத்திலே சொன்னோம், "ஒரு ராஜ்யம் மற்றொரு ராஜ்யத்தின் மீது கேஸ் போடுவது நன்றாயிருக்காது. அதனால், எந்தத் தீர்ப்பு ஆந்திரா ஹைகோர்ட் கொடுக்கிறதோ அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம். அது வரையில் கட்டணம் கட்டாமல் ஓட்டிக் கொண்டிருக்கிறோம்" என்று சொன்னோம். அதைப்பற்றி பேசிக் கொண்டிருக்கும்போதே அவர்கள் இந்த பஸ்களைப் பிடித்து நிறுத்திவிட்டார்கள். அதனால் நாம் சர்விசை நிறுத்தி விட்டோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இம்மாதிரியாக இரு அரசாங்கங்களிடையே உயர்மட்டத்தில் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறபோது ஆந்திர அரசாங்க அதிகாரிகள் நம்முடைய பஸ்ஸைத் தடுத்து நிறுத்தினார்கள் என்றால் இந்தத் தவறை அரசாங்க அதிகாரிகளே செய்தார்களா? அல்லது அந்த அரசாங்க அமைச்சர்களுடைய சமிக்ஞையின் பேரில் செய்யப்பட்ட தவறா?

9-00 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது ஆந்திர ராஜ்ய சட்ட சபையில் போட வேண்டிய கேள்வி.

திரு. சி. பொன்னுசாமி: திருப்பதி பஸ் போக்குவரத்து மிகவும் முக்கியமானதாகையால் இரு ராஜ்ய முக்கியஸ்தர்களும் இனிமேலாவது கலந்து பேசி ஒரு சமரச ஏற்பாட்டுக்கு வர முயற்சி செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சர்க்கார் இந்த திருப்பதி பஸ்ஸை ஓட்டுவதாக உத்தேசம் இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர்: திருப்பதி ரூட் நமக்கு லாபமாக ஓடிக் கொண்டிருந்ததா, நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருந்ததா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: லாபம் இல்லையென்று சொன்னேன்.

திரு. பி. கே. மூக்கையா தேவர்: திருப்பதிக்குச் சென்று வந்த பஸ்ஸை, நமக்கு நஷ்டம் வந்துக்கொண்டிருந்தது என்பதனால் நிறுத்திவிட்டார்களா? அல்லது ஆந்திர அரசாங்கத்தார் செய்த காரியத்தின் விளைவாகக் கோபத்தில் நிறுத்தி விட்டார்களா?

MR. SPEAKER: I do not allow that question.

திரு. கே. ஏ. மதியழகன்: திருப்பதி போன்ற யாத்திரை ஸ்தலங்களில் சர்க்கார் ரொம்ப அக்கறை கொண்டிருப்பதனால், திருப்பதிக்கு விஜயம் செய்கிற பக்தர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருப்பதனால் மீண்டும் பஸ் சர்வீஸ் விடுவது பற்றி ஆலோசனை செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நமக்கு லாபம் இல்லாத காரியத்தைச் செய்யத் தேவை இல்லை.

22nd January 1965]

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஆந்திர அரசாங்கத்தைச் சேர்ந்த பஸ்கள் நம் ராஜ்யத்தில் எத்தனை ரூட்டுகளில் சென்று கொண்டிருக்கின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனியாகக் கேள்வி வேண்டும்.

அரசாங்க பஸ்களின் கட்டணம்

* 64 கேள்வி—**திரு. மு. கருணநிதி** : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் ஓடிக்கொண்டிருக்கும் அரசாங்க பஸ்களின் கட்டணத்தைக் குறைக்கக்கோரி, அண்மையில் அரசாங்கத்திற்கு ஏதேனும் விண்ணப்பம் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் இம்மாநில அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) ஆம்.

(இ) விண்ணப்பதாரர்கள் இதைக் குறித்து மேலும் விவரங்கள் அனுப்பிய பின்னர், இது ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, புதிதாக ரூட்டை ஏற்படுத்தி யிருக்கிறார்களே, அதிலே எக்ஸ்பிரஸ் பஸ்களுக்கு 5 பைசா உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால் டிக்கெட் நிர்ணயிக்கும் போது 75, 80 என்பதாக வைக்கப்படுகிறது. இதனால் ஒரு ரூபாய் ஐந்து பைசாவரக்கூடிய டிக்கெட்டுக்கு ஒரு ரூபாய் இருபத்தைந்து பைசாவாகிற நிலை இருக்கிறது. இதை அரசாங்கம் பரிசீலனை செய்தார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதைப் பற்றித் தனியாக எழுதி அனுப்பினால் விவரங்களை எல்லாம் சேகரித்துப் பரிசீலனை செய்ய முடியும்.

திரு. கே. ஏ. மதியழகன் : இப்போது அவர்களிடம் இருந்து வந்துள்ள விண்ணப்பத்தில் இருக்கிற விவரங்கள் என்ன? சில முக்கிய அம்சங்களைப் பற்றியாவது சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்களுடைய விண்ணப்பத்தில் முக்கியமானது ஸ்டேஜ்கள் சரியாக அமையவில்லை, அதை ஒழுங்காக அமைத்துக் கொடுக்க வேண்டுமென்பது. எப்படி அமைக்க வேண்டும் என்கிற விவரங்களையே அவர்களிடம் திரும்பக் கேட்டு இருக்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த அரசாங்கத்திற்கு வந்திருக்கக் கூடிய முறையீடுகளில் அடங்கியுள்ள முக்கியமான கோரிக்கைகள் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முக்கியமான கோரிக்கை பஸ் சார்ஜை குறைக்க வேண்டும் என்பதுதான். அதை ஏற்பதற்கு இல்லையென்று சொல்லிவிட்டோம். அடுத்த கோரிக்கை